SNS academy
a fingerprint school

SNS INSTITUTIONS

# பத்தாம் வகுப்பு

# இயல் 7

# மெய்க்கீர்த்தி

# (இரண்டாம் இராச ராச சோழன்)

# இரண்டாம் இராசராசன்



- கோப்பரகேசரி, திருபுவனச் சக்கரவர்த்தி என்று புகழப்பட்டவன்.
- இவனை புகழ்ந்து 2 மெய்க்கீர்த்திகள் உள்ளன.
- அதில் ஒன்று 91 வரிகளைக் கொண்டது.

# மெய்க்கீர்த்தி



இராசராசன் காலத் தமிழ் கல்வெட்டு, 11 ஆம் நூற்றாண்டு, பெரிய கோயில், தஞ்சாவூர்.

- அரசர் தங்கள் பெருமையும் புகழும் காலம் கடந்தும் நிலைக்க வேண்டும் என்று நினைத்து அதனை கல்லில் செதுக்கினர்.
- முதலாம் இராசராசன் காலத்திலிருந்து மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.
- கல்வெட்டின் முன்பகுதியில் மன்னனை புகழ்ந்து எழுதப்படும் வரிகள் - மெய்க்கீர்த்திகள்
- புலவர்களால் எழுதப்பட்டு, கல் தச்சர்களால் கல்லில் செதுக்கப்பட்டது.

இந்தி ரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி

வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய






படியானையே பிணிப்புண்பன
வடிமணிச்சிலம்பே யரற்றுவன
செல்லோடையே கலக்குண்பன
வருபுனலே சிறைப்படுவன
மாவே வடுப்படுவன
மாமலரே கடியவாயின
காவுகளே கொடியவாயின
கள்ளுண்பன வண்டுகளே

பொய்யுடையன வரைவேயே
போர்மலைவன எழுகழனியே
மையுடையன நெடுவரையே
மருளுடையன இளமான்களே
கயற்குலமே பிறழ்ந்தொழுகும்
கைத்தாயரே கடிந்தொறுப்பார்
இயற்புலவரே பொருள்வைப்பார்
இசைப் பாணரே கூடஞ்செய்வார்

என்று கூறி இவன்காக்கும் திருநாட்டி னியல்இதுவென
நின்றுகாவல் நெறிபூண்டு நெறியல்லது நினையாது
தந்தையில்லோர் தந்தையாகியுந் தாயரில்லோர் தாயராகியும்
மைந்தரில்லொரு மைந்தராகியும் மன்னுயிர்கட்குயிராகியும்
விழிபெற்ற பயனென்னவும் மெய்பெற்ற அருளென்னவும்
மொழிபெற்ற பொருளென்னவும் முகம்பெற்ற பனுவலென்னவும்
எத்துறைக்கும் இறைவனென்னவும் யாஞ்செய்....